_

<u>முதல் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>

முன்னிலை:- திருமதி.எஸ்.எழில், எம்.எல்.,

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,

2026 ம் வருடம் மார்ச் மாதம் 23 ம்நாள் திங்கட்கிழமை

(திருவள்ளுவராண்டு 2057-ஸ்ரீ விசுவாவசு வருடம்-பங்குனித் திங்கள் 9 ம்நாள்)

<u>மேல்முறையீட்டு வழக்கு எண்.163/2018</u>
(CNR No.TNED01-001078-2018)

1. ஜி.ராமச்சந்திரன் (இறந்துவிட்டார்), வயது சுமார் 57,த/பெ.குருசாமி, வசிப்பிடம் கதவு எண்.275, ஜான்ஸ் பில்டிங்க், அசோக் நகர், மூலப்பாளையம், ஈரோடு -1, ஈரோடு தாலூக்கா, ஈரோடு மாவட்டம்.
(இ.ம.எண்.2/2025 ல் 01.07.2025 தேதியிட்ட உத்தரவின்படி திருத்தம் செய்யப்பட்டுள்ளது)
2. சுமதி,வயது சுமார் 58, க/பெ.லேட்.ஜி.ராமசந்திரன், வசிப்பிடம் கதவு எண்.10 ஏ, வேலாயுதம்பாளையம், அவல்பூந்துறை மெயின் ரோடு, அவல்பூந்துறை, ஈரோடு - 638 115.
3. பொன்சங்கரி,வயது சுமார் 28, த/பெ.லேட்.ஜி.ராமசந்திரன்,வசிப்பிடம் கதவு எண்.10 ஏ, வேலாயுதம்பாளையம், அவல்பூந்துறை மெயின் ரோடு, அவல்பூந்துறை, ஈரோடு - 638 115.
4. விக்னேஷ்,வயது சுமார் 24, த/பெ.லேட்.ஜி.ராமசந்திரன், வசிப்பிடம் கதவு எண்.10 ஏ, வேலாயுதம்பாளையம், அவல்பூந்துறை மெயின் ரோடு, அவல்பூந்துறை, ஈரோடு - 638 115.
(இறந்து போன மேல்முறையீட்டாளரின் வாரிசுகளான 2 முதல் 4 மேல்முறையீட்டாளர்கள் இ.ம.எண்.1/2025 ல் 26.03.2025 தேதியிட்ட உத்தரவின்படி தரப்பினராகச் சேர்க்கப்பட்டு இ.ம.எண்.2/2025 ல் 01.07.2025 தேதியிட்ட உத்தரவின்படி திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

.. மேல்முறையீட்டாளர்/வாதி
இறந்துபோன மேல்முறை
-யீட்டாளரின் வாரிசுகள்

// எதிர் //

1. என்.ஜெகநாதன்,வயது சுமார் 57, த/பெ.நாச்சிமுத்து ஆசாரி, வசிப்பிடம் முத்தூர் மெயின் ரோடு, முத்துகவுண்டன்பாளையம், நஞ்சை ஊத்துக்குளி கிராமம், ஈரோடு தாலூக்கா.
2. ஏ.என்.தியாகராஜன். வயது சுமார் 54, த/பெ.லேட்.நாச்சிமுத்து ஆசாரி, வசிப்பிடம் முத்தூர் மெயின் ரோடு, முத்துகவுண்டன்பாளையம், நஞ்சை ஊத்துக்குளி கிராமம், ஈரோடு தாலூக்கா.

.. எதிர்மேல்முறையீட்டாளர்கள்/
பிரதிவாதிகள்

இந்த மேல்முறையீடு, ஈரோடு, 2 ம் கூடுதல் சார்பு நீதிமன்றம், அ.வ.எண்.183/2012 வழக்கில் கடந்த 22.02.2018 ம்தேதியில் வழக்கை தள்ளுபடி செய்து பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து, இந்த

மேல்முறையீட்டை அனுமதித்து, அசல் வழக்கை அனுமதித்து வாதிக்கு வழக்குரையில் கோரியுள்ளபடி நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்க வேண்டுமென்று கோரி வாதியால் 15.07.2018 ம்தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>இடையே:</u>**

ஜி.ராமச்சந்திரன். ..வாதி

// எதிர் //

1. என்.ஜெகநாதன்
2. ஏ.என்.தியாகராஜன். ..பிரதிவாதிகள்

பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ எவரும் தாவாச் சொத்தில் அத்துமீறி நுழையவோ, வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்தில் இடையூறு செய்யவோ கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்கக் கோரியும் மற்றும் வாதியின் இவ்வழக்குச் செலவுத் தொகையுடன் தீர்ப்பாணை வழங்கக் கோரியும் வாதியால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு,மேற்படி வழக்கு, விசாரணை நீதிமன்றத்தின் முழு விசாரணைக்கு பின்னிட்டு, அசல் வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளதில், மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையால் மனக்குறைவுற்ற வாதி இம்மேல்முறையீட்டு வழக்கினை தாக்கல் செய்து, விசாரணை நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து,அசல் வழக்கை அனுமதித்து வாதிக்கு வழக்குரையில் கோரியுள்ளபடி நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்க வேண்டுமென்றும், இந்த இம்மேல்முறையீட்டை அனுமதிக்கவும் வேண்டுமென்று கோரியுள்ளார்.

இந்த மேல்முறையீடு தாக்கல் செய்த நாள் - 15.07.2018

இந்த மேல்முறையீட்டுக்கு வழக்கு மதிப்பு - ரூ.1000/-

இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம்
மற்றும் தாவா மதிப்பீட்டு சட்ட பிரிவுகள்
27(c), உ/இ 52 ன் கீழ்
செலுத்தப்பட்ட நீதிமன்ற முத்திரைக் கட்டணம் - ரூ.30/-

இந்த மேல்முறையீட்டு வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக 03.03.2026 ம் தேதி இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மேல்முறையீட்டாளர்/வாதி இறந்துவிட்டதால் அவருடைய வாரிசுகள் 2 முதல் 4 மேல்முறையீட்டாளர்களாகச் சேர்க்கப்பட்டு மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் திரு.எஸ்.ஜீவானந்தம், வழக்கறிஞர் அவர்களும், 1 ம் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் திரு.டி.செந்தில்குமார், வழக்கறிஞர் அவர்களும், 2 ம் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் திரு.கே.மோகன்ராஜ், வழக்கறிஞர் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளை ஒருசேரக் கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, வழக்கு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

**<u>தீர்ப்பாணை</u>**

1. இந்த மேல்முறையீட்டு வழக்கு அனுமதிக்கப்படுகிறது.

2. ஈரோடு, 2 ம் கூடுதல் சார்பு நீதிமன்றம், அ.வ.எண்.183/2012 ல் கடந்த 22.02.2018 ம்தேதி வழக்கை தள்ளுபடி செய்து பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

3. அசல் வழக்கை அனுமதித்து, வாதிக்கு வழக்குரையில் கோரியுள்ளபடி பிரதிவாதிகளோ, அவர்களுடைய ஆட்களோ, முகவர்களோ எவரும் தாவாச் சொத்தில் அத்துமீறி நுழையவோ, வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்தில் இடையூறு செய்யவோ கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

4. செலவு தொகை இல்லை.

<u>சான்றளிக்கப்பட்ட செலவுத் தொகைப் பட்டியல்</u>

| <u>மேல்முறையீட்டாளர்கள் தரப்பில்</u> | 1 ம் <u>எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில்</u> | |
|---|---|---|
| (தாக்கல் இல்லை) | வக்காலத்து ஸ்டாம்பு | ரூ. 10.00 |
| | வழக்கறிஞர் கட்டணம் | ரூ.500.00 |
| | | --------------- |
| | மொத்தம் | ரூ.510.00 |
| | | ----------- |

<u>சொத்து விபரம்</u>

ஈரோடு ரிடி, அவல்பூந்துறை சப்ரிடி, ஈரோடு வட்டம், நஞ்சை ஊத்துக்குளி கிராமம், பழைய க.ச.எண்.115/ஏ3, இதன் ரீ.ச.எண்.49/1, பு.ஹெ.1.51.0க்கு த.ரூ.3.02 இதில்

| | | |
|---|---|---|
| 46 புதூர் செல்லும் கிழமேல் பஞ்சாயத்து ரோட்டிற்கும் | .. | தெற்கு |
| செட்டுக்காரர் துரைசாமி அவர்கள் பாக சொத்திற்கும் | .. | வடக்கு |
| தென்வடல் முத்தூர் மெயின் ரோட்டிற்கும் | .. | மேற்கு |
| தியாகராஜன் இடத்திற்கும் | .. | கிழக்கு |

இதன் மத்தியில்

இருபுறமும் கிழமேலடி 24

இருபுறமும் தென்வடலடி 36

ஆக இந்த வகை அளவுள்ள 846 சதுரடிக்கு 80.3 சதுர மீட்டர் விஸ்தீரணமுள்ள வீட்டு மனைக் காலியிடம் பூராவும். இதில் 10 x 10 அடி அளவில் கட்டப்பட்டிருக்கும் சிதைந்த நிலையில் உள்ள கள்ளிக்கோட்டை ஓடு வேய்ந்த வில்லை வீடு வகையறா பூராவும். மேற்படி வீட்டிற்கு சம்பந்தப்பட்ட சகல கதவு நிலவு ஜன்னல் கட்டுக்கோப்பு வகையறாக்கள் சகிதமும். இதற்கு சம்மந்தப்பட்ட மாமூல் வழிநடை தட பாத்தியங்கள் சகிதமும்,

இன்று 2026 ம் வருடம் மார்ச் மாதம் 23 ம்நாள் என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு வழங்கப்பட்டது.

S EZHIL
Digitally signed by S EZHIL
Date: 2026.03.23 19:52:48 +0530

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,
ஈரோடு

தீர்ப்பாணை
மே.மு.வ.எண்.163/2018
நாள் 23.03.2026
மு.கூ.மா..நீ.ம., ஈரோடு.

IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE OF ERODE.

A.S.163/2018

1.G.Ramachandran (died) and 3 others ... Appellants
(Amended as per order in IA 2/25,
dated 01.07.25)

//Vs//

1. Jaganathan and another ... Respondents

VALUATION SLIP

| | | |
|---|---|---|
| 1. Nature of the appeal | : | Suit for permanent injunction |
| 2. Section and Sub section | : | Section 27(c) r/w 52 of TNCF Act |
| 3. Value of the appeal | : | Rs.1000/- |
| 4. Court fees paid | : | Rs.30/- |

Sd/xxxx
Appellants

Sd/xxxx
Advocate for Appellants.

// By Order //

(Sd./)Translator
IADJ Court, Erode.